**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 207/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 1 |
| Name : | திருமதி. அழகம்மாள் |
| Father's Name/Husband Name: | திரு. பொன்ராமன் |
| Village : | நொச்சிக்குளம் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 65 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2025.

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( 1,2, 4 எதிரிகள் ஆஜர் )**
**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் தான் இருந்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எதிரிகள் எங்கள் பாதையை சேர்த்து வீடு கட்டிக் கொண்டனர். அதனால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 9 மணியளவில் என்னுடைய கோழிக்குஞ்சு பழனிசாமி வீட்டிற்கு முன்பாக சென்றது அதனை பழனிசாமி விரட்டினார். நான் பழனிசாமியிடம் எட்டு நாட்களுக்குள் என்னுடைய இடத்தை கிளின் செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னேன் அதற்கு எதிரி ஊர் ஒழுத்தவ, தேவிடியா அவளே இவளேன்னு திட்டினார். நான் எதிரி பழனிசாமியிடம் படலை எடுக்கவேண்டும் என்று சொன்னேன். எதிரிகள் சந்துக்குள்ளாக அடிக்க வந்துவிட்டனர். நானும் எனது கணவரை நால்வரும் அடித்து கொன்றுவிடுவார்கள் என்று பயந்து வீட்டிற்குள் அழைத்து வந்துவிட்டேன். அன்றைய தினம் இரவு 7 மணியளவில் எனது மகன் சுப்ரமணியன் பழனிசாமி வீட்டு வாசலுக்கு சென்று ஏன் என் அப்பா அம்மாவை பேசினீர்கள் என்று கேட்க சென்றார். அதற்கு

எதிரி பழனிசாமி எனது மகனை புண்டைய ஒழுக்கன்னு சொல்லி அடிச்சி கீழே தள்ளிவிட்டார். அதன்பிறகு சாந்தி விலக்கமாறால் எனது மகனை அடித்தார். கிருஷ்ணன் குச்சியால் என்னை அடித்தார். எனது மகனையும் அடித்தார். எதிரி பாப்பா என் முடியை இழுத்து போட்டு அடித்தார். என்னை சீமானும், சுப்ரமணியனும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் சம்பவம் குறித்து விசாரித்தனர். நான் போலிசாரிடம் சம்பவம் குறித்து சொன்னேன் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக் கொண்டனர். கையெழுத்து கேட்டனர். போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த புகார் சம்மந்தமாக போலிசார் இரண்டு முறை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்கத்தெரியாது என்றால் கையெழுத்து மட்டும் போடுவேன். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கியதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடம் தொடர்பாக முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். இடம் தொடர்பாக சிவில் நீதிமன்றத்தில் நான் வழக்கு போடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் என்னை திட்டவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் உள் நோயாளியாக இருக்கும்போது அன்றைய தினமே போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் மறுநாள் காலை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் நான் கூறுவது போல் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், இடப்பிரச்சனை சம்பந்தமாக முன் விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. உண்மையாக இடப்பிரச்சனை இருந்திருந்தால் நான் உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு தொடுத்திருப்பேன் என்றாலும், அப்படி ஒரு பிரச்சனை இல்லை என்பதால் தான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.